முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 790**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

27.11.2021, சனிக்கிழமை

1. ஓங்கார பிரம்மமே அரங்கா வாழ்க
ஓங்கார என் சூட்சுமமே தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே
ஓதிடுவேன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசி தனை பிலவ தேள் திங்களில்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 11ம் நாள், 27.11.2021 சனிக்கிழமை)
அரங்கன் உன் சேவை உலகறிய உரைப்பேன்
வாசி வென்ற ஞானிகளெல்லாம்
வணங்கி அரங்கன் உன் சேவைக்கு
3. சேவைக்கு இணங்கி உலக மக்களிடை
சிறப்பான சக்தி தவமாக ஈந்துவர
வருகின்ற இந்த அற்புதங்கள்
வையகமெங்கும் சூட்சுமமாக நடந்துவர
4. தருகின்ற அரங்கன் தர்மத்தை கொண்டு
தரணியில் எல்லா சக்திகளும் இறங்கிவந்தருள
அருளுகின்ற அரங்கன் சன்மார்க்கமே
அகிலத்தை மாற்றவல்ல உயர் மார்க்கமாகும்
5. அருளுகின்ற அரங்கன் தர்மமே
அகிலத்தை காக்கவல்ல மாதர்மமாகும்
தர்மத்தின் வேலியாக வாழும்
தவராஜன் அரங்கன் கொள்கைக்குள்ளே
6. உள்ளாக ஆறுமுகன் சர்வசூட்சுமமாய்
உயர்வான சக்தியாய் இருந்தருள்புரிய
அருள்புரியும் அரங்கன் பிரணவக்குடிலில்
ஆக்க சக்திகளாக அளவில்லா ஞானசக்திகள்
7. சக்திகள் வரம் ஈந்து சகலரையும் ஞானியாக்கும்
சர்வ சூட்சுமம் உலக இயக்கமாக நடந்துவர
வருகவே அரங்கனை தொடர்ந்தால்
வையகத்தில் யாவர்க்கும் ஞானியாகும்
8. பெருமை மிக்க வாய்ப்பு உறுதியாகும்
பிசகின்றி இந்த பேருலகமெங்கும் ஞானவான்கள் படை பெருகி
பெருகியே கலியுகம் எல்லாவகையும்
கண்டுரைப்பேன் ஆற்றல்மிக்க பூமியாக

9. அழியாமை கொண்டவர்கள் மூலம்
ஆளுமை நிரம்பி அகிலம்
ஞான ஆட்சியை பெறும்
அறிவித்த ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–